

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 19.01.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்

We Shine Academy™







# தமிழக நிகழ்வுகள்

- தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை **(ஜனவரி 19) போலியோ சொட்டு மருந்து முகாமில் 70.50 லட்சம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து** வழங்கும் வகையில் **43,051 மையங்களை சுகாதாரத் துறை** அமைத்துள்ளது.
    - தமிழகத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் 5 வயதுக்கு உள்பட்ட சுமார் 70.50 லட்சம் குழந்தைகள் இருப்பதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.
    - சென்னையில் உள்ள முதல்வரின் இல்லத்தில் சொட்டு மருந்து முகாம்களை தமிழக முதல்வர் தொடங்கி வைக்கிறார்.
    - **செய்தி துளிகள் :**
        - நாடு முழுவதும் இளம்பிள்ளைவாத நோயை தடுப்பதற்காக 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.
        - இந்த முகாமில் விடுபடும் குழந்தைகளைக் கண்டறிய அவர்களின் இடது கை சுண்டு விரலில் மை வைக்கப்படும்.
        - போலியோ இல்லாத நாடுகளின் பட்டியலில் இந்தியா 2014-ம் ஆண்டு இடம்பெற்றது.

# தேசிய நிகழ்வுகள்

- காவல் துறையினருக்கான **"போல்நெட் 2.0" தளத்தை ஜனவரி 20-ம் தேதி தொடங்கி வைக்கிறார் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.**
  - "போல்நெட்" தளத்தின் மூலம் காவல் துறையினர் மற்றும் பாதுகாப்பு படையினர் சட்டம் - ஒழுங்கு விவகாரம் தொடர்பாக தகவல்களை பரிமாறிக் கொள்கின்றனர்.
  - நாட்டின் எல்லையோர மற்றும் கடலோரப் பகுதிகளில் உள்ள மாநிலங்களின் காவல் துறை தலைவர்களுடன் "போல்நெட் 2.0" தளத்தின் மூலம் அமித் ஷா தொடர்பில் இருப்பார்.
  - **செய்தி துளிகள் :**
    - "போல்நெட்" தளம் கடந்த 2006 – ஆம் ஆண்டு முதல் இத்தளம் பயன்பாட்டில் உள்ளது.
    - நாட்டின் தொலைதூரப் பகுதியில் உள்ள 260 காவல் நிலையங்களை இணைக்கவும் இத்தளம் உதவி புரியும்.

- **ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 5 மாதங்களுக்குப் பிறகு "ப்ரீ – பெய்டு" சேவை தொடங்கப்பட்டுள்ளது.**
  - ஜம்மு – காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த ஆகஸ்ட் 5 – ம் தேதி ரத்து செய்தது.
  - முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக தொலைபேசி, செல்லிடப்பேசி, இணையச் சேவைகள் முடக்கப்பட்டன.
  - **செய்தி துளிகள் :**

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசமைப்பு சட்டத்தின் 370 – ஆவது பிரிவு கடந்த ஆகஸ்ட் 5-ம் தேதி ரத்து செய்யப்பட்டது.
- ஜம்மு காஷ்மீரைப் பிரித்து லடாக் மற்றும் ஜம்மு – காஷ்மீர் என இரண்டு யூனியன் பிரதேசங்களையும் மத்திய அரசு உருவாக்கியது.
- ஒருங்கிணைந்த ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் கடைசி முதல்வர் மெஹபூப முக்தி ஆவர்.

## சர்வதேச செய்திகள்

- **ரஷியாவில் காலவரையற்ற அதிபர் பதவிக்கு அந்நாட்டு அதிபர் விளாதிமீர் புதின் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.**
    - ரஷியாவின் புதிய பிரதமராக மிகயீல் மிஷீஸ்டினை அதிபர் புதின் நியமித்துள்ளார்.
    - ரஷியாவின் அதிபராக தொடர்ந்து மூன்று முறை பதவி வகிக்க அந்நாட்டு அரசியல் சாசனம் அனுமதிக்கவில்லை.
    - **செய்தி துளிகள் :**
        - ரஷியாவில் பிரதமரை நியமிப்பதற்கான அதிகாரம் ரஷிய அதிபரிடம் உள்ளது.
        - ரஷியாவின் அதிபராக விளாடிமீர் புதின் இதுவரை 4 முறை அதிபராக பதவி வகித்துள்ளார்.
        - கடந்த 2008 – ம் ஆண்டு ரஷியாவின் பிரதமராக புதின் பதவி வகித்துள்ளார்.

- ▪ ரஷிய அரசியலமைப்பு சட்டம் 1993 – ம் ஆண்டு டிசம்பர் 25-ம் நாள் நடைமுறைக்கு வந்தது.

## விளையாட்டு செய்திகள்

- **ஹோபார்ட் டென்னிஸ் : சானியா மிர்ஸா சாம்பியன் பட்டம்** வென்றார்.
  - ஹோபர்ட் டென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்ஸா இணை வெற்றி பெற்றது.
  - ஒற்றையர் பிரிவில் எலெனா ரபாகினா சாம்பியன் பட்டம் வென்றார்.
  - **செய்தி துளிகள் :**
    - ▪ இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா முன்னாள் உலக நம்பர் ஒன் வீராங்கனையாக இருந்தார்.
    - ▪ இரட்டையர் பிரிவில் இதுவரை சானியா மிர்சா 6 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

## திருக்குறள்

குறள் எண் : 82

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : விருந்தோம்பல்


We Shine Academy TM

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**

**விளக்கம் :** விருந்தினர் வீட்டின் வெளியெயிருக்க, தான் மட்டும் தனித்திருந்ருது உண்பது அமிழ்தமேயானாலும், அது விரும்பத்தக்கதன்று.

We Shine Academy™